


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | அக்டோபர் 03, 2019 | புரட்சி 18 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00


## ‘தகுதி’யாய் நுழைந்த ‘நீட்’ – ‘மோசடி’யாய் வளர்ந்து நிற்கிறது

நீட் தேர்வு – தகுதிக்கான தேர்வு என்றது மோடி ஆட்சி.

நீட் தேர்விலிருந்து தமிழ் நாட்டுக்கு விலக்குக் கோரி தமிழக சட்டமன்றம் ஒருமித்து நிறைவேற்றிய தீர்மானத்தையும் கிடப்பில் போட்டார்கள்.

அனிதா உள்ளிட்ட மருத்துவராகும் கனவோடு படித்து நல்ல மதிப்பெண் பெற்ற மூன்று சகோதரிகளின் உயிரை ‘நீட்’ பறித்தது.

நீட் தேர்வு வினாத்தாளில் குளறுபடிகள் நடந்தன. தவறான விடைகளைத் தந்து பிறகு சலுகை மதிப்பெண் வழங்கினார்கள்.

வடநாட்டில் நீட் தேர்வுக்கான பயிற்சி மய்யங்கள் தில்லுமுல்லுகளை செய்து குறுக்கு வழிகளில் தேர்ச்சி பெறும் மோசடி வித்தைகளை அரங்கேற்றுவதற்கு ‘நீட்’ பயன்பட்டது; பயன்படுகிறது.

தமிழ்நாட்டிலருந்து நீட் தேர்வு எழுதுவதற்கு வெளி மாநிலங்களில் தேர்வு மய்யங்களை ஒதுக்கினார்கள். உடன் சென்ற தமிழ்நாடு பெற்றோர் சிலரும் வெளி மாநிலங்களிலே மாரடைப்பால் பிணமானார்கள்.

நீட் தேர்வு எழுதச் சென்ற மாணவச் செல்வங்களை உள்ளாடை வரை ‘சோதனை’ செய்து அவமதித்தார்கள்.

இப்போது பெரும் தொகையை இலஞ்சம் பெற்றுக் கொண்டு மகாராஷ்டிரா உள்ளிட்ட சில மாநிலங்களில் தேர்வு எழுத வைத்து தேர்ச்சி பெற வைக்கும் மோசடிகள் அம்பலமாகி வருகின்றன.

தமிழ் நாட்டில் இதுபோல சில இடைத் தரகர்கள் வழியாக 7 பேர் ஆள் மாறாட்டம் செய்து தேர்வுகளை எழுத வைத்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

சில மாணவர்களும் பெற்றோர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். வட மாநிலங்களின் கதை இனிமேல்தான் தெரிய வரும்.

தகுதிக்காக நுழைந்த ‘நீட்’ தேர்வு ஆள் மாறாட்ட மோசடி நிலைக்கு வந்து நிற்கிறது.

### ஆர்.எஸ்.எஸ். ‘தேச பக்தி’ இயக்கமா?

# முகத்திரையை கிழிக்கும் அடுக்கடுக்கான ஆதாரங்கள்

***மொழி உரிமை, இன உரிமை, பண்பாட்டு உரிமைகளைப் பேசுவதே ‘தேச விரோதம்’ – ‘ஆன்டி நேஷனல்’ என்று பார்ப்பனர்கள் கூப்பாடு போடுகிறார்கள். இவர்கள் பேசும் ‘தேசபக்தி’ வரையறைக்குள் ஆர்.எஸ்.எஸ். வருகிறதா?***

மொழி உரிமை, இன உரிமை, பண்பாட்டு உரிமைகளைப் பேசினாலே ‘தேச விரோதிகள்’ - ‘ஆன்டி இண்டியன்’ என்று எச். ராஜா போன்ற பார்ப்பனர்கள் ஓலமிடுகிறார்கள். ஆர்.எஸ்.எஸ். மட்டுமே ‘தேச பக்தி’ கொண்ட அமைப்பு என்கிறார்கள். நாங்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ். என்ற ‘தேசபக்த’ நெருப்பில் புடம் போட்டு வந்தவர்கள் என்று பூணூலை உருவுகிறார்கள். உண்மையில் இவர்கள் பேசுகிற தேசபக்தி என்பது இந்திய அரசியல் சட்டத்துக்கும் இந்திய தேசியத்துக்கும் தேசியக் கொடிக்கும் மட்டுமே விசுவாசமாக இருப்பதுதான். சரி, அந்த அளவுகோலின்படியாவது இவர்கள் தேச பக்தர்கள் தானா? இல்லை என்பதே இதற்கான பதில். இது குறித்து ஆய்வாளரும் எழுத்தாளருமான ஏ.ஜி.நூரானி ‘டான்’ இதழில் எழுதிய கட்டுரையை ‘டெக்கான் குரோனிக்கல்’ ஏடு (செப். 29, 2014) வெளியிட்டுள்ளது. பார்ப்பன ‘தேச பக்தி’ முகத்திரையைக் கிழித்தெறியும். அக்கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவத்தை இங்கே தருகிறோம்.

“இப்போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதன் அரசியல் பிரிவான பாரதிய ஜனதா வழியாக மத்தியிலும் பல மாநிலங்களிலும் ஆட்சி நடத்தி வருகிறது. ஆனால், “இந்திய அரசியல் சட்டத்தை புறக்கணிக்கிறோம்; இந்தியாவின் ஜனநாயக அமைப்பு முறையையும் நாங்கள் ஏற்கவில்லை” என்று ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகவே பிரகடனப் படுத்தியுள்ள அமைப்பு தான் ஆர்.எஸ்.எஸ். ஆர்.எஸ்.எஸ். முன்னணி அமைப்பு களில் ஒன்றான விசுவ இந்து பரிஷத் வழியாகவே இப்போது ஆர்.எஸ்.எஸ். தனது கருத்துகளை வெளிப்படுத்தி வருகிறது. விசுவ இந்து பரிஷத் செயல் தலைவராக இருக்கும் அலோக்குமார் அண்மையில் ஒரு மாநாட்டில் பேசும் போது, “இந்தியாவின் அடையாளம் பண்பாடு ‘இந்து’ என்பதுதான். இதை சீர்குலைக்கும் நோக்கத்தோடு கட்டாய மத மாற்றங்கள் நடக்கின்றன. இந்த மத மாற்றங்களைத் தடை செய்து அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்” என்று பேசியிருக்கிறார்.

இந்திய அரசியல் சட்டம் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்று தெளிவாகக் கூறுகிறது. ஆனாலும், அரசியல் சட்டத்தை மதிக்கஇவர்கள் தயாராக இல்லை. ‘இந்தியா’ இந்துக்களுக்கான நாடாகவே இருக்க வேண்டும் என்கிறார்கள். அரசியல் சட்டம் ஒருவர் விரும்புகிற மதத்தை ஏற்கலாம் என்று வழங்கியுள்ள மதச் சுதந்திர உரிமையை (பிரிவு 25) மறுக்கிறார்கள். மூவர்ண இந்திய தேசியக் கொடியை தேசியக் கொடியாக ஆர்.எஸ்.எஸ். ஏற்கவில்லை. ‘பஜ்வாதுவாஜா’ என்று அவர்கள் அழைக்கும் காவிக் கொடியை மட்டும் அங்கீகரித்து அதையே ‘குரு’வாகவும் அடையாளப்படுத்துகிறார்கள்.

குருவாக இவர்கள் அடையாளப்படுத்தும் காவிக் கொடிக்குத்தான் பெரும் தொகை நன்கொடையாக ‘குரு தட்சணை’ என்ற பெயரில் வாங்குகிறார்கள் இந்த ‘குருதட்சணை’க்கு தாராளமான வரிச் சலுகைகள் வருமான வரித் துறையால் வழங்கப்பட் டுள்ளது. அவர்கள் இந்திய தேசியத்தை மறுத்து இந்து தேசியத்தையே தங்களிடம் அடையாள மாக்கிக் கொண்டுள்ளனர். இந்தியாவின் தேசியக் கொடியை நிராகரிப்பதன் வழியாக அரசியல் சட்டத்தையும் அவமதித்து வருகிறார்கள்.

1993 ஜனவரி முதல் தேதி ஆர்.எஸ்.எஸ். வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் இந்திய அரசியல் சட்டம் இந்துக்களுக்கு எதிரானது என்று அறிவித்ததோடு தாங்கள் விரும்பும் தேசம் எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பதற்கான திட்டங்கள் மற்றும் யோசனைகளையும் அந்த வெள்ளை அறிக்கை முன் வைத்தது. அந்த வெள்ளை அறிக்கைக்கு சுவாமி ஹிரானந்த் ஒரு அணிந்துரை எழுதியுள்ளார். அதில் இவ்வாறு குறிப்பிடுகிறார். “இந்தியாவின் அரசியல் சட்டம், நாட்டின் பண்பாடு, குணாம்சம், சூழல், சூழ்நிலைகளுக்கு முற்றிலும் எதிரானது. இந்தச் சட்டம் அன்னிய நாட்டுச் சார்புடையது.... நம்முடைய பொருளாதாரம் நீதி, நிர்வாக அமைப்புகளில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்றால், இந்திய அரசியல் சட்டத்தை முதலில் முடக்கி செயல்படுத்தாமல் தடுக்க வேண்டும். இந்த சட்டத்தை முழுமையாக புறந்தள்ள வேண்டும்” (It had to be discarded completely).



A.G. Noorani

Is Constitution ‘anti-Hindu’ or the RSS anti-Indian?

200 ஆண்டுகால பிரிட்டிஷ் ஆட்சி இழைத்த கேடுகளை இந்திய அரசியல் சட்டம் இழைத்துள்ள கேடுகளோடு ஒப்பிட்டால் பிரிட்டிஷார் இழைத்த கேடு சொற்பம்தான். ‘பாரதத்தை’ இந்தியாவாக மாற்றும் சதி தொடர்ந்து கொண்டிருக்கிறது. (The damage done 200 years long rule of the British is negligible as compared the harm done by our constitution. The conspiracy to convert Bharath into India Continue.).

மேலும் அந்த ஆர்.எஸ்.எஸ். வெள்ளை அறிக்கைக்கான அணிந்துரையில் அவர் எழுது கிறார்: “உலகம் முழுதும் நாம் ‘இந்தியர்களாக’ அடையாளப்படுத்தப்படுகிறோம். ஆனால் நமது சுதந்திரப் போராட்டத்தை இந்து மதத்தின் அடிப்படையில் தான் நடத்தினோம். ‘வந்தே மாதரம்’ தான் நமது தேசிய கீதமாக இருந்தது. ஆனால் சுதந்திர இந்தியா நமது இந்துஸ்தானையும் வந்தே மாதரத்தையும் வெளியேற்றி விட்டது” என்று எழுதினார்.

அரசியல் சட்டத்தை முற்றாக ஒழித்தாக வேண்டும் என்ற கருத்தை திட்டமிட்டு ஆர்.எஸ்.எஸ். தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வருகிறது.

பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து 1992 டிசம்பர் 25ஆம் தேதி மசூதி இடிப்புக்கு முன்னிலை வகித்த சுவாமி முக்தானந்த் என்பவர் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அதில் இவ்வாறு கூறினார்.

“இந்துக்களுக்கு எதிரான அரசியல் சட்டத்தை நாம் நிராகரிக்க வேண்டும். இந்த நாட்டின் சட்டங்களில் நமக்கு முழுதுமாக நம்பிக்கை இல்லை. நமது புனிதமான சாதுக்கள் நமது புண்ணிய பூமியில் சட்டத்தைவிடவும் மேலானவர்கள் இந்தியாவின் குடிமக்கள் அனைவரையும் இயற்கையான குடிமக்களாகவும் சமமானவர்களாகவும் நமது அரசியல் சட்டம் கூறுவது, ஒரு ஏமாற்று வித்தை.” (humbug)

1993 ஜனவரி மாதம் அப்போது ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த ராஜேந்திர சிங் இவ்வாறு கூறினார். “இந்தியா, எனும் பாரதம் என்று சட்டம் கூறுகிறது. நாம் அதை ஏற்க முடியாது ‘பாரத், எனும் இந்துஸ்தான்’ என்று தான் நாம் கூற வேண்டும். அரசு ஆவணங்கள் நம்முடையது பன்முகக் கலாச்சாரம் என்று கூறுகிறது. ஆனால் நம்முடைய கலாச்சாரம் நிச்சயமாக பன்முகக் கலாச்சாரம் அல்ல (Official documents refer to the composite culture, but ours is certainly not composite culture).

1993 ஜனவரி 24இல் அப்போது பா.ஜ.க. தலைவராக இருந்த முரளி மனோகர் ஜோஷி அரசியல் சட்டம் மாற்றப்பட்டாக வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினார். அவர் வெளியிட்ட ஒரு பிரசுரம். “இந்தியாவின் பண்பாடு வரலாறு தெரியாத மேற்கத்திய நாட்டுக்காரர்களால் உருவாக்கப்பட்டதே இந்திய அரசியல் சட்டம்” என்று கூறியது. நமது அரசியல் சட்டம் முழுதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதற்கு இவை எல்லாம் முக்கிய காரணிகளாகும் என்று எழுதியுள்ளார்.

அதே நூலில் முரளி மனோகர் ஜோஜி, பட்டியல் இனப் பிரிவு, பழங்குடிப் பிரிவு மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்குவதைக் கடுமையாகக் கண்டித்தார். “அரசியல் சட்டம் ஒரு குப்பைத் தொட்டி. அது குப்பைகளின் குவியல்; தேசிய ஒருமைப்பாடு ஒற்றுமைக்கு அரசியல் சட்டமே எதிரி” என்றும் பா.ஜ.க. தலைவர் முரளி மனோகர் ஜோதி அதில் எழுத்துபூர்வமாக பதிவு செய்தார் என்று ஆதாரங்களோடு எழுதியுள்ளார் ஏ.ஜி. நூராணி.

இந்திய அரசியல் சட்டம் தேசியக் கொடி பற்றி இப்படி வெறுப்பையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்திக் கொண்டுள்ள பாாப்பனர்கள்தான் உரிமைக்குக் குரல் கொடுத்தால் தேச விரோதிகள் என்று முத்திரை குத்துகிறார்கள் - இதுதான் பார்ப்பனர்களின் இரட்டை வேடம். ●

# கிருஷ்ணகிரி, திருப்பூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல்



28.9.2019 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில், கிருஷ்ணகிரி மாவட்டம் இராயக் கோட்டையை அடுத்த சிகரபள்ளி குமார் தோட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி முன்னிலையில் நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை மாவட்டக் கழகச் செயலாளர் குமார் வரவேற்றுப் பேசினார். வாஞ்சிநாதன் கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினர்

தொடர்ந்து அலேசீபம் பழனி, நீலகிரி கிருஷ்ணன், உத்தனப்பள்ளி முனிராஜ், தாசனபுரம் சுப்பு, யூபுரம் மல்லேஷ் ஆகியோர் தங்கள் கருத்துக்களையும், கழக செயல்பாட்டு திட்டங்களையும் குறித்து கருத்துக்களை முன் வைத்தனர்.

அவரைத் தொடர்ந்து கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி கழகத்தின் நிலைப்பாடுகள் குறித்தும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எழுச்சியுடன் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்தும், பெரியாரியல் கொள்கைகளை விளக்கியும் அவற்றை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகளை எடுத்துக் கூறியும் உரையாற்றினார்

இறுதியாக உரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சியாக பெரியார் திராவிடர் கழகமாக இருந்தபோது புதிய தோழர்களை அழைத்துக் கொண்டு வீச்சாக செயல்பட்ட பழனி செயல்பாடுகளை நினைவுகூர்ந்தும், அதற்கு இங்கு எழுந்த எதிர்ப்புகளைப் பற்றியும், அதைத் துணிவோடு எதிர்கொள்ள பழனிக்குத் துணை நின்ற தோழர்களின் பங்கினையும் நினைவு கூர்ந்தார். அதனைத்தொடர்ந்து நாம் இப்போது இருக்கிற சூழலில் தமிழினத்திற்கு ஆபத்தாக தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிக்க பாஜக ஆட்சியின் முன்னெடுப்புகளை விளக்கியும், அதனை எதிர்ப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய செயல் திட்டங்களைப் பற்றி விளக்கியும், மக்களோடு நாம் மேற்கொள்ளவேண்டிய அணுகுமுறைகளைப் பற்றியும் விரிவாக உரையாற்றினார்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் செய்தி ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம், மாத ஏடான நிமிர்வோம் ஆகியவற்றுக்கு சந்தாக்களைத் திரட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது

புதிய கல்விக் கொள்கையின் ஆபத்துகளை விளக்கி, அக்கொள்கை அறிக்கையை மத்திய அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும் வருகிற அக்டோபர் இரண்டாம் நாள் கிருஷ்ணகிரியில் புதிய கல்வி கொள்கை வரைவு அறிக்கையைக் கிழித்தெறியும் ஆர்ப்பாட்டத்தை ஒத்த கருத்துள்ளவர்களை உடன் இணைத்துக் கொண்டு நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கீழ்க்கண்டவாறு பொறுப்பாளர்களைக் கழகத் தலைவர் அறிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டக் கழகம் : தலைவர் :. ப. வாஞ்சிநாதன்; செயலாளர்:. குமார், சிகர பள்ளி; அமைப்பாளர்: கிருஷ்ணன், நீலகிரி; பொருளாளர்: மைனர் என்கிற வெங்கடகிரியப்பா; துணைத் தலைவர்: அலேசீபம் பழனி; துணைச் செயலாளர்: சங்கர் நீலகிரி; துணை அமைப்பாளர்: இரமேஷ் சிக்கே கவுண்டனூர்.

கெலமங்கலம் ஒன்றியம் : தலைவர்: நாகமங்கலம் செந்தில், செயலாளர்: இருதாளம் கிரி, அமைப்பாளர்: நாகமங்கலம் இரகு, பொருளாளர்: பழையூர் முனிராஜ், துணைத் தலைவர்: நீலகிரி ஜெகதீஸ்.

சூளகிரி ஒன்றியம் : தலைவர்: லிங்கம்பட்டி ஐயப்பன், செயலாளர்: உத்தனபள்ளி முனிராஜ், அமைப்பாளர்: பாலேபுரம் சதீஷ், பொருளாளர்: ஹரிஷ், அகரம், துணைத் தலைவர்: தேன்துர்க்கம் வெங்கட்ராஜ், துணை செயலாளர்: கிருஷ்ணாபுரம் சுரேஷ்.

ஒசூர் ஒன்றியம் : தலைவர்: தாசனபுரம் மாதேஷ், செயலாளர்: ஒசூர் இமு.

கிருஷ்ணகிரி ஒன்றியம் : தலைவர்: நதி வர்மன், செயலாளர்: மணி அரசு, அமைப்பாளர்: வினோத்.

தளி ஒன்றியம் : தலைவர்: தாசனபுரம் சுப்பு செயலாளர்: அனுமந்தபுரம் பிரபாகரன்

**திருப்பூர்**

திருப்பூர் நகர திராவிடர் விடுதலைக் கழக கலந்தாய்வு கூட்டம் முத்துலட்சுமி வீட்டில் நடைபெற்றது. கூட்டத்தில் பள்ளிபாளையம் மாநாட்டு தீர்மானத்தின் படி புதிய கல்வி கொள்கை 2019 வரைவு அறிக்கை கிழித்தெறியும் போராட்டத்தை மாவட்ட தோழர்கள் அனைவரையும் ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்துவது எனவும் பெரியாரின் 141ஆ வது பிறந்த நாள் விழாவை நகரம் முழுவதும் கொடியேற்று விழாவாக நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் தோழர்கள் முத்துலட்சுமி, முத்து, நீதிராசன், முகில்ராசு, துரைசாமி, அகிலன், அய்யப்பன், தனபால், யாழினி, யாழிசை ஆகியோர் கலந்து கொண்டனர்

# உ.பி. அரசால் பழி வாங்கப்பட்ட மருத்துவர் நேர்மையானவர்

உத்திரப் பிரதேசம் கோராக்பூர் மருத்துவமனையில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை காரணமாக குழந்தைகள் பலியான சம்பவத்தில் மருத்துவர் கஃபீல்கான் குற்றமற்றவர் என துறை ரீதியாக விசாரணை நடத்திய குழு அறிக்கை அளித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் கோரக்பூரில் உள்ள அரசுக்கு சொந்தமான பாபா ராகவ்தாஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளை வீக்கம் காரணமாக கடந்த 2017-ஆம் ஆண்டு சுமார் 80-க்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

மருத்துவமனைக்கு ஆக்சிஜன் சிலிண்டர் விநியோகித்து வந்த தனியார் நிறுவனம் தனது நிலுவைத் தொகைக்காக ஆக்ஸிஜன் விநியோகத்தை நிறுத்தியதே குழந்தைகள் பலியானதற்குக் காரணம் என குற்றம் சாட்டப்பட்ட இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆனால் குழந்தைகளக் காப்பாற்ற தனது சொந்த பணத்தில் வெளியிலிருந்து ஆக்சிஜன் கொண்டு வந்து பல குழந்தைகளைக் காப்பாற்றி நற்பெயர் எடுத்த குழந்தைகள் மருத்துவர் கஃபீல்கான் ஆளும் பாஜக அரசால் கைது செய்யப்பட்டார். பணியில் இருந்தும் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டார். ஆனால், தனது சொந்த பணத்தில் ஆக்ஸிஜன் சிலிண்டர்களை வாங்கி சில குழந்தைகளின் உயிரை அவர் காப்பாற்றியதாக தகவல்கள் வெளியாகின. அதேசமயம், தான் பலிகடா ஆக்கப்பட்டதாகவும், தான் குற்றமற்றவர் எனவும் கான் தொடர்ந்து கூறி வந்தார். சுமார் 9 மாதங்கள் சிறைத் தண்டனைக்கு பின்னர், ஜாமினில் வெளிவந்த கான், இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை கோரி வந்தார்.

இந்த நிலையில், இது தொடர்பாக விசாரணை நடத்திய அரசு நியமித்த குழு தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. அதில், ஆக்ஸிஜன் பற்றாக்குறையை முன்கூட்டியே தனது மூத்த அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். அவர் அலட்சியமாக செயல்படவில்லை. சம்பவம் நடைபெற்ற அன்றைய இரவு தன்னால் இயன்றவரை தனது சொந்த பணத்தில் ஆக்சிஜன் சிலிண்டர்கள் வாங்கி குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற போராடினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த தீர்ப்பு குறித்து தெரிவித்துள்ள டாக்டர் கஃபீல்கான் தனது ட்விட்டர் பக்கத்தில், "உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். குழந்தைகளை பலி கொடுத்த பெற்றோர்கள் நீதிக்காக இன்னும் காத்துக் கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களிடம் அரசு மன்னிப்பு கோருவதுடன், அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

# நகல் கிழிப்பு ஏன்? சென்னையில் ஒரு நாள் பரப்புரைக் கூட்டங்கள்



கல்விக் கொள்கை நகல் கிழிப்புப் போராட்டத்தை விளக்கி சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் செப். 30 அன்று காலை முதல் இரவு வரை சென்னையில் பரப்புரைப் பயணம் எழுச்சியுடன் நடந்தது. ஓட்டேரி, வில்லிவாக்கம், திருவல்லிக்கேணி, மேற்கு சைதாப்பேட்டை, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் நடந்த பரப்புரை கூட்டங்களுக்கு முறையே தட்சிணாமூர்த்தி, சங்கிதா, இராஜி, ப. அருள், மனோகர், கரு. அண்ணாமலை தலைமை தாங்கினர். இரா. உமாபதி, அய்யனார், சுகுமார் கூட்டங்களில் உரையாற்றினர். நாத்திகன் பாடல்களைப் பாடினார். 22 தோழர்கள் பயணக் குழுவில் இடம் பெற்றனர். துண்டறிக்கைகள் மக்களிடம் வழங்கப்பட்டன.

# அண்ணா பல்கலையில் ‘பகவத் கீதை’ ஏன் நுழைகிறது?

*இந்திய தத்துவத்தில் கருத்து முதல்வாதம் என்பது வெறும் ஆன்மீக வாதமாக மட்டும் இருக்கவில்லை. மாறாக சமூகத்தில் நிலவிய பிற்போக்கு கருத்துகளை, குறிப்பாக வர்ணாசிரமத்தை – கருத்து முதல்வாதம் வலுவாக தூக்கிப் பிடித்தது. வர்ணாசிரமத்தை – சமூகத்தின் பிரிக்க முடியாத அம்சமாக நிலைநாட்டிட கருத்து முதல்வாதமும் ஏற்றத்தாழ்வான சமூகக் கோட்பாடுகளை முன்வைத்த சட்டக் கோட்பாடுகளான மனுஸ்மிருதியும் அர்த்தசாஸ்திரமும் ஒன்றுக் கொன்று துணை போயின.*

அண்ணா பல்கலைக்கழகத்தில் கணினி பொறியியல் பிரிவு மாணவர்களுக்கு “தத்துவம்” என்ற பெயரில் ஒரு பாடத்தை அறிமுகப்படுத்த பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது. இதனை எடப்பாடி அரசாங்கம் அனுமதித்துள்ளது என்பது தெளிவு. திராவிட இயக்கத்தின் ஒரு பகுதி எனும் தகுதியை அ.தி.மு.க. வெகு நாட்களாகவே இழந்து வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் அ.தி.மு.க.வை பா.ஜ.க.வின் துணை அமைப்பாக மாற்றிவிடுவார்களோ என கருதும் அளவிற்கு இ.பி.எஸ்- ஓ.பி.எஸ் கூட்டணியின் சரணாகதி வேகமாக அரங்கேறி வருகிறது. இந்த சரணாகதியின் தற்போதைய நிகழ்வுதான் பொறியியல் மாணவர்களுக்கு “தத்துவம்” குறித்த பாடத் திட்டங்கள்.

இதில் மாணவர்கள் என்னென்ன படிக்க வேண்டும் என அண்ணா பல்கலைக் கழகம் முன்வைத்துள்ளது?

வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை.

இதில் பாரபட்சம் எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காக, பிளேட்டோ மற்றும் பிரான்சிஸ் பேக்கன் ஆகியோரின் படைப்புகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் கடும் விமர்சனம் எழுந்ததால் துணை வேந்தர் சூரப்பா, இது கட்டாயம் கிடையாது எனவும் விருப்ப பாடங்கள்தான் எனவும் கூறியுள்ளார். இதன் பொருள் “கட்டாய விருப்பப் பாடம்” என சில கல்வியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

### எதிர்ப்பு ஏன்?

இந்த திட்டத்தை எதிர்ப்பதற்கு அடிப்படையான காரணம் என்னவெனில் பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு தத்துவம், அதுவும் ஆன்மீகம் தொடர்பான பாடங்கள் ஏன் தேவை என்பதாகும். உலகின் மற்ற பகுதிகளில் இவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை. மேற்கத்திய நாடுகளில் பொறியி யல் மாணவர்களுக்கு பைபிள் கற்பிக்கப்படுவது இல்லை; அரேபிய நாடுகளில் கூட பொறியியல் படிப்பில் குர் ஆன் பற்றி போதிக்கப்படுவது இல்லை. ஆனால் இந்தியாவில் சங் பரி வாரம் தனது பாசிச நிகழ்ச்சி நிரலை திணிக்க எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இதனை அமல்படுத்துகிறது. அதிமுக அரசாங்கம் துணை போகிறது. இன்னொரு முக்கியமான அம்சம், “இந்திய தத்துவம்” எது என்பது ஆகும். சங்பரிவாரம், ஆன்மீகம் மட்டும்தான் இந்திய தத்துவம் என கூறுகிறது. அதாவது இந்திய தத்துவ கோட்பாடு களில் கருத்து முதல் வாதம் மட்டும்தான் உள்ளது என்பது சங் பரிவரத்தின் அடிப்படைக் கருத்து ஆகும். துரதிர்ஷ்டவச மாக இந்தக் கருத்து திலகரிலிருந்து காந்திஜி மற்றும் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வரை வியாபித்திருந்தது. எனினும் இது உண்மை அல்ல. கடவுள் மறுப்பை உள்ளடக்கிய பொருள் முதல்வாத கருத்துகள் இந்திய தத்துவத்தின் பிரிக்க முடியாத பகுதியாக இருந்துள் ளன என்பதை தேவி பிரசாத் சட்டோபாத்யாயா அவர்கள் ஆணித் தரமாக வரலாற்று உண்மைகள் மூலம் நிரூபித்துள்ளார்.

சங்பரிவாரத்தின் திட்டம் ஆன்மீகத்தை மட்டும் முன் நிறுத்துவதுதான்! அதனால்தான் அந்நிய தேசங்களின் கருத்து முதல்வாதிகளான பிளேட்டோ மற்றும் பிரான்சிஸ் பேக்கனை முன்நிறுத்துகின்றனர். பொருள் முதல்வாதத்தை முன்வைத்த டெமாக்கிரட்டஸ் அல்லது எப்பிகூரஸ் அல்லது பாயர்பாக் ஆகியோர் அவர்களின் பட்டியலில் இடம் பெற மாட்டார்கள். இந்தியாவின் சமரசமற்ற பொருள்முதல்வாத போராளிகளான லோகாயதவாதிகளையும் இந்திய தத்துவ வாதிகள் என இவர்கள் அங்கீகரிப்பது இல்லை. அதே போல் பின்னர் வேதங்களிடம் சரண் அடைந்தாலும் மீமாம்சம், சாங்கியம், நியாயம், வைசேசிகம் ஆகிய இந்திய தத்துவ கோட்பாடுகளும் பொருள் முதல்வாதம் பற்றி வலுவாகப் பேசின. மேலும் தொடக்க கால பவுத்தம் மற்றும் சமணம் கூட வேதங்களை மறுத்து பொருள் முதல்வாதம் மற்றும் கடவுள் மறுப்பு பற்றி வாதங்களை முன்வைத்தன.

**“மனுஸ்மிருதியும் ஆதிசங்கரரின் அத்வைத வேதாந்தம் முன்வைத்த மாயாவாதமும்தான் இந்தியாவில் அறிவியல் தொழில் நுட்பம் வளராததற்கு காரணம்.”**

மநு கூறுகிறார்:

“ஸ்ருதி எனில் வேதங்கள் என அறியப்பட வேண்டும். ஸ்மிருதி எனில் சட்ட கோட்பாடுகள் என அறியப்பட வேண்டும். இவை இரண்டுமே சட்டத்தின் மூலக்கூறுகள் ஆகும். இவற்றை மாற்றுக் கருத்து மூலம் கேள்விக்கு உட்படுத்தக் கூடாது. தர்க்கத்தின் வலிமையில் நம்பிக்கை கொண்ட எவன் ஒருவன் வேதத்தையோ அல்லது சட்டக் கோட்பாடுகளையோ உதாசீனப்படுத்துகிறனோ அவன் நாத்திகன் என வகைப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய மனிதன் பிராம ணனாக இருந்தாலும் அவன் சமூகத்திற்கு வெளியே தூக்கி எறியப்பட வேண்டும்.” மனித குலம் பிராமணர்கள்/ சத்திரியர்கள்/வைசியர்கள்/சூத்திரர்கள் என நால்வர்ணத்தை கொண்டிருக்கிறது என கூறும் மனுஸ்மிருதி பிரம்மனின் எந்தெந்த பாகத்திலி ருந்து எந்த வர்ணம் உருவானது என்பதையும் கூறுகிறது. சூத்திரர்களின் பிறவிக் காரணமே ஏனைய மூன்று பிரிவினருக்கு சேவை செய்வதுதான் எனவும் குறிப்பிடுகிறது. ஏனெனில் மற்ற மூன்று பிரிவினரும் இரண்டு முறை பிறப்பவர்கள்; ஆனால் சூத்திரர்கள் மட்டும் ஒரு முறைதான் பிறக்கின்றனர் எனவும் மனுஸ்மிருதி கூறுகிறது.

சூத்திரர்கள் தாங்கள் நினைத்தாலும் தமது அடிமைத் தளத்திலிருந்து விடுபட முடியாது; ஒரு சூத்திரனின் எஜமான் அவனை விடுதலை செய்தாலும் அது செல்லாது எனவும் மனு கூறுகிறது. இதனை மேலும் விரிவுபடுத்தி ஆதி சங்கரர் கூறுகிறார்: “வேதங்களைக் கேட்கும் சூத்திரனின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்”. “வேதங்களை சூத்திரன் கூறினால் அவனது நாக்கு அறுக்கப்பட வேண்டும்; அவன் மனதில் வேதம் இருப்பதாக கருதப்பட்டால் அவனின் உடல் துண்டாக்கப்பட வேண்டும்”. சூத்திரர்களின் உழைப்பால் உருவான உபரி உற்பத்தி முழுவதும் அபகரிக்கப்பட்டது. உடல் உழைப்பு மட்டுமே சூத்திரர்கள் செய்ய வேண்டும் எனவும்; மூளை உழைப்பு அவர்களுக்கு உரித்தானது அல்ல எனவும் சூழல் உரு வாக்கப்பட்டது. மூளை உழைப்பு பற்றி சிந்திக்க இயலாத அளவிற்கு சூத்திரர்கள் உடல் உழைப்பின் மூலம் கசக்கிப் பிழியப்பட்டனர்.

### லோகாயதவாதிகளின் சவால்

இந்த கோட்பாடுகளுக்கு எதிராக லோகாயதவாதிகள் சவால் விடுத்தனர். அவர்கள் கீழ்கண்டவாறு எதிர்வாதம் செய் தனர் “சொர்க்கமும் மோட்சமும் வெற்று வார்த்தைகள்”. “விலங்கை பலியிடுவதன் மூலம் அது சொர்க்கத்திற்குச் செல்கிறது என வேதவாதிகள் கூறுகின்றனர். அப்படியானால் அவர்கள் ஏன் தமது தந்தையரை பலியிட்டு சொர்க்கத்திற்கு அனுப்பி வைக்கக் கூடாது?”.

“மூன்று வேதங்களை உருவாக்கியவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள்; வஞ்சகத் திருடர்கள்”. “நீங்கள் வாழும்வரை மகிழ்வாக வாழுங்கள்; கடன் வாங்கியாவது நன்றாக சாப்பிடுங்கள்; உடல் சாம்பலான வுடன் அது எப்படி மீண்டும் திரும்ப முடியும்?” - இந்த பகிரங்க சவால்கள் இயல்பாகவே கருத்து முதல்வாதி களை கோபம் அடையச் செய்தது. எனவே அவர்கள் லோகா யதவாதிகளையும் அவர்களது தத்துவ நூல்களையும் வேட்டையாடினர். அவற்றை அழித்துவிட்டு இந்திய தத்துவம் என்பது ஆன்மீகம் அடங்கிய கருத்து முதல்வாதம் மட்டும்தான் என்றனர். தற்போது, இந்திய தத்துவம் என்ற போர்வையில் ஆன்மிகம் அடங்கிய பிற்போக்கு கருத்துகளை மட்டுமே பொறியியல் மாணவர்களுக்கு போதிப்பதற்கு திட்டமிடப்படு கிறது. இது கடுமையாக கண்டிக்கப்பட வேண்டும்; நிராகரிக்கப்பட வேண்டும்.

### தொழிற்புரட்சி ஏன் இந்தியாவில் உருவாகவில்லை?

இந்திய தத்துவம் என்ற பெயரால் கருத்து முதல்வாதத்தை பாடமாக முன்வைப்பது இன்னொரு மிகப்பெரிய ஆபத்திற்கு வழிவகுக்கும். தொழிற் புரட்சி ஏன் இங்கிலாந்து மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உருவானது? ஏன் இந்தியா அல்லது சீனாவில் உருவாகவில்லை? இந்த கேள்வியை ஜோசப் நீதம் உட்பட பல அறிஞர்கள் எழுப்பியுள்ளனர். ஆர்யபட்டா, வராமிஹிரா, பிரம்மகுப்தா போன்ற பல அறிவியல் வல்லுநர்கள் தோன்றிய இந்திய சமூகத்தில் ஏன் தொழிற் புரட்சி நடக்கவில்லை? இந்திய இரசாயன அறிவியலின் பிதாமகரான பி.சி.ரே இந்த கேள்விக்கு பதில் தருகிறார்:

“மனுஸ்மிருதியும் ஆதிசங்கரரின் அத்வைத வேதாந்தம் முன்வைத்த மாயாவாதமும்தான் இந்தியாவில் அறிவியல் தொழில் நுட்பம் வளராததற்கு காரணம் ஆகும்” மனுஸ்மிருதி இறந்தவரின் உடலை தொடுவது தீட்டு என்றது. உடற்கூறு அறிவியலுக்கு இறந்த உடலை அறுத்து ஆய்வு செய்வது அவசியமாகிறது. பிணத்தைத் தொடுவது தடுக்கப்பட்டதால் உடற்கூறு ஆய்வும் மருத்துவ அறிவியலும் இந்திய சமூகத்தில் மரணத்தைத் தழுவின. ஆதி சங்கரரின் மாயாவாதம் காரணமாக மாய உலகில் எதற்கு அறிவியல் கண்டுபிடிப்பும் ஆய்வுகளும் எனும் போக்கு வலுவாக உருவானது. இதன் காரணமாக பண்டைய அறிவியல் தொழில்நுட்ப அடித்தளத்தின் மீது முன்னேற்றம் இந்தியாவில் உருவாகவில்லை. (சீனாவிலும் இதே காரணம் என்கிறார் ஜோசப் நீதம். புரட்சிக்கு பிறகு அது சரி செய்யப்பட்டது.) ஆகவே பொருள் முதல்வாதத்தின் பின்ன டைவு இந்திய சமூகத்தில் அறிவியலின் மரணத்திற்கும் காரண மாக அமைந்தது. எனவேதான் இந்திய தத்துவம் என்ற பெய ரால் ஆன்மீகவாதத்தையும் கருத்து முதல்வாதத்தையும் பல்கலைக் கழகங்களில் முன்வைப்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக அமையும் என வலுவாக குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு முற்போக்காளருக்கும் உள்ளது.

**– மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
24.9.2019 ‘தீக்கதிர்’ நாளேட்டில்
வெளிவந்த கட்டுரை**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 03.10.2019**

# மக்கள் பேராதரவோடு நடந்த திருப்பூர், கோவை பரப்புரை

மண்ணின் மைந்தர்களின் உரிமை முழக்க பிரச்சாரப் பயணத்தில் 4 நாட்களிலும் பெண் தோழர்கள் துண்டறிக்கை கொடுப்பது கடைகளில் வசூல் செய்வது என்று சிறப்பாக செய்தார்கள், குறிப்பாக, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளிடம் கருத்துகளை அதிகம் கொண்டு சேர்க்கப்பட்டது, திருப்பூர் அருள்புரம் பகுதி இந்து முன்னணி அதிகம் உள்ள பகுதி அங்கு நிறைய பேர் நிகழ்ச்சியை கேட்டார்கள்; புத்தகங்களும் வாங்கி சென்றார்கள், கோவை, செட்டிபாளையம், பனப்பட்டி, புதிய பகுதி எந்த இடையூறும் இன்றி சிறப்பாக நிகழ்வு நடந்தது, உடுமலை பேருந்து நிலையத்தில், பேருந்துகளில் பயணம் செய்வேரிடம், ஒவ்வொரு பேருந்திலும் நிர்மல்குமார் கருத்துகளை சொல்ல தோழர்கள், முனியப்பன், கிருஷ்ணன் இருவரும் நிதி வசூல் செய்தார்கள். நல்ல வரவேற்பு இருந்தது 1 மணி நேரத்தில் இரண்டாயிரத்து தொண்ணூற்று ஒரு ரூபாய் வசூல் செய்தார்கள், காங்கேயம் பேருந்து நிலையத்தில் நிகழ்வு நடக்கும் போது இந்து முன்னணியைச் சேர்ந்த 4 – 5 பேர் வந்து வீடியோ எடுத்து காவலாளர்களிடம் விவாதம் செய்தனர். அவர்களை நமது தோழர்களும் வீடியோ படம் எடுத்தனர்.

திருப்பூர் அணி 4 நாள் பயணத்தில் கலந்து கொண்ட தோழர்கள்: துரைசாமி, சூலூர் பன்னீர்செல்வம், அய்யப்பன்-திருப்பூர், சங்கீதா, பார்வதி, மூர்த்தி, பெரியார் முத்து, பாலு, நிர்மல்குமார், உக்கடம் கிருஷ்ணன், முத்து, மடத்துகுளம் மோகன், அகிலன், இராசசிங்கம், சரஸ்வதி, கதிர்வேல் ஆனை மலை, சூலூர் பாபு, கனல் மதி, பல்லடம் சண்முகம், கார்த்தி பொங்கலூர், மயில்சாமி, இராசாமணி, முனியப்பன் சூலூர், பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, ஆனந்த் ஆனைமலை, சபரி, கிரி, விவேக், அன்னூர் விஷ்ணுபிரசாத், மனோரஞ்சனி, பல்லடம் மணிகண்டன், தேன் மொழி, முகில்ராசு, இணையம் விசயகுமார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வீதி நாடகம் கலை நிகழ்வுகளுடன் மேட்டூர் பயணக் குழு நடத்திய எழுச்சிப் பிரச்சாரம்





17.09.2019 தந்தை பெரியார் 141ஆவது பிறந்தநாளில் மண்ணின் மைந்தர்களின் உரிமை முழக்க பரப்புரைப் பயணம் சமத்துவபுரத்தில் காலை 10 மணிக்கு தொடங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சமத்துவபுரத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சார பயணத்தை துவக்கி வைத்தார். பயணம் சமத்துவபுரம், மல்லிகுந்தம், மேச்சேரி, நங்கவள்ளி, குஞ்சாண்டியூர், RC பிளாண்ட், ராமன் நகர், புதுச் சாம்பள்ளி, மேட்டூர் RS, தேசாய் நகர், சேலம் கேம்ப், தங்கமாபுரி பட்டிணம், காவேரி கிராஸ், மாதையன் குட்டை, புதுக் காலனி, பெரியார் நகர், தூக்கணாம்பட்டி, காவேரி நகர், சின்ன பார்க், பாரதிநகர், குமரன் நகர், பொன்னகர், ஆஸ்பத்திரி காலனி, ஒர்க் ஷாப் கார்னர், பெரியார் பேருந்து நிலையம், மேட்டூர் நகர படிப்பகம் ஆகிய அனைத்து பகுதிகளிலும் கொடி யேற்று விழாவாகவும் இரு சக்கர வாகன பேரணியாகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவினை கழகப் பொறுப்பாளர்களும் தோழர் களும் சிறப்பாக நடத்தினார்கள். கொடியேற்று விழாவின்போது பயணத்தை விளக்கக் கூடிய துண்டறிக்கை பொது மக்கள் மத்தியிலே கொடுக்கப்பட்டது. நிறைவாக மேட்டூரில் அனைத்து தோழர்களுக்கும் மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது.

இரண்டாவது நாளாக 18.9.2019 காலை 10 மணிக்கு பிரச்சார பயணம் கொளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கோவிந்தப்பாடியில் தொடங்கியது. இந்த தொடக்க விழாவில் திராவிட முன்னேற்ற கழகத்தை சார்ந்த இளைஞரணி பொருப்பாளர் மிதுன் திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்த முன்னாள் பஞ்சாயத்து தலைவர் முனுசாமி, தடா பழனிசாமி கலந்து கொண்டு பிரச்சாரப் பயணத்தை விளக்கிப் பேசினார்கள். மதியம் 12 மணிக்கு கருங்கல்லூரில் பிரச்சாரம் நடைபெற்றது. மாலை 3 மணிக்கு தெலுங்கனூரிலும் மாலை 5 மணிக்கு கொளத்தூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. பிரச்சாரப் பயணத்தில் முதல் நிகழ்வாக பறை முழக்கமும் அதனைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சியும் வீதி நாடகமும் சிறப்பாக நடைபெற்றது. இந்த கலை நிகழ்ச்சிகள் பொதுமக்கள் மத்தியிலே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

மூன்றாவது நாள் 19.09.2019 காலை 11 மணிக்கு தர்மபுரி மாவட்டம் தொப்பூர் பேருந்து நிலையத்தில் பயணம் தொடங்கியது. பயணத்தின் நோக்கத்தை விளக்கி துண்ட றிக்கைகள் பொது மக்கள் மத்தியிலும் தொப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி நுழைவாயிலில் தேர்வு முடிந்து வெளியே வரும் மாணவர்களிடமும் கொடுக்கப்பட்டது. மதியம் 12.30 மணிக்கு தீவட்டிப்பட்டியில் பிரச்சாரம் தொடங்கியது. மதிய உணவு மேச்சேரி சூரியகுமார் ஏற்பாடு செய்தார்கள். மாலை 3 மணிக்கு எங்களுடைய பிரச்சார பயணம் சின்னத்திருப்பதியில் தொடங்கியது. சின்ன திருப்பதி பகுதியில் பறை, இசை, வீதி நாடகம் வழியாக பொது மக்களிடத்தில் பிரச்சாரப் பயணத்தின் நோக்கத்தை விளக்கி தோழர்கள் பேசினார்கள். மாலை 4.30 மணிக்கு மேச்சேரி பேருந்து நிலையத்தின் எதிரே நிகழ்ச்சி தொடங்கியது. மேச்சேரி பேருந்து நிலையத்திலே கல்லூரி பள்ளி மாணவர்கள் பொது மக்கள் மத்தியில் பிரச்சார பயணத்தை பற்றி விளக்கக்கூடிய துண்டறிக்கை கள் வழங்கப்பட்டன. மேச்சேரி பேருந்து நிலையத்திலே நடைபெற்ற நிகழ்ச்சி தொடர்ந்து பொதுக் கூட்டம் போல சிறப்பாக நடைபெற்றது.

மூன்றாவது நாள் 20-9-2019 காலை 11 மணிக்கு சேலம் மாவட்டம் முத்து நாயக்கன்பட்டியில் தொடங்கியது. பயணத்தின் முதல் நிகழ்வாக பறை முழக்கமும் இசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. முத்து நாயக்கன்பட்டி பொது மக்கள் மத்தியிலே துண்டறிக்கை வழங்கப் பட்டது. மதியம் 12 மணிக்கு ஜல கண்டாபுரம் பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடங்கியது. ஜலகண்டா புரம் பேருந்து நிலையத்தில் பொது மக்கள் மத்தியிலே துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. அங்கு வீதி நாடகமும் இசை நிகழ்ச்சியும் பறை முழக்கமும் சிறப்பாக நடைபெற்றது. பேருந்து நிலையத்தில் திரளாக பொதுமக்கள் பிரச்சாரத்தை கூர்ந்து கவனித்தார்கள். பொதுமக்கள் நன்கொடை வழங்கினார்கள். மதியம் 2 மணி வரை பிரச்சாரம் நடைபெற்றது. மதிய உணவு எடப்பாடி பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது. மதியம் 3 மணிக்கு எடப்பாடி பேருந்து நிலையத் தில் பயணம் தொடங்கியது. எடப்பாடி பேருந்து நிலையத்தில் திரளான பொதுமக்கள் திரண்டிருந்தனர். பறை முழக்கமும் வீதி நாடகமும் இசை நிகழ்ச்சியும் அங்கு நடத்தப்பட்டது. மாலை 5 மணிக்கு பிரச்சார பயணம் பள்ளிபாளையம் நிறைவு விழா மாநாட்டில் கலந்து கொண்டது.

மாநாட்டில் மேட்டூர் குழுவின் சார்பாக வீதி நாடகமும் இசை நிகழ்ச்சியும் பறை முழக்கமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல் அதேபோல தலைமைக் குழு உறுப்பினர்கள் சக்திவேல், காவை ஈஸ்வரன் ஆகியோர் வீதி பிரச்சாரப் பயணத்தை ஒட்டிய கருத்துகளை மக்களிடத்தில் எடுத்துரைத்தார்கள். வீதி நாடக குழுவிலே இடம் பெற்ற பரத் பயணத்தை விளக்கி பொது மக்களிடத்திலே உரையாற்றினார். பிரச்சார பயணத்தில் கலந்து கொண்ட தோழர்கள் சி.கோவிந்தராசு (மாவட்டச் செயலாளர், பயணக் குழு ஒருங்கிணைப்பாளர்), அ.சக்திவேல் (தலைமைக் குழு உறுப்பினர்) காவை ஈஸ்வரன் (தலைமைக் குழு உறுப்பினர்), அ.அண்ணாதுரை, இரா. முத்துக் குமார், சு.குமரப்பா, சீனி வாசன், சர வண பரத், ஐ.காளியப்பன், அ.பிரதாப், அ.திவாகர், அ.அரவிந்த், சு.விஜய், மு.விக்னேஸ், சி.செட்டி (எ) பிரசாந்த், பழ. சுசீந்திரன், சு.இராமச்சந்திரன், ச.நாகராஜ், சா.பென்னட், பொ. முரளிதரன், சி.தங்கதுரை, கு.விவேக், நா. செல்வராஜ், இரா.முத்துராஜ், மா.சக்திவேல் ஆகிய 25 தோழர்கள் பிரச்சார பயணத்தில் பங்கு பெற்றார்கள். பிரச்சார பயணத்தை விளக்கி பொது மக்களிடத்தில் 5000 துண்டறிக்கைகள் வினியோகிக்கப் பட்டன.

## பெரியார் யுவராஜ்-லீலாவதி ஜாதி-தாலி சடங்கு மறுப்பு மணவிழா



சென்னை மாவட்ட ‘நிமிர்வோம்’ வாசகர் வட்ட அமைப்பாளரும் கழக செயற்பாட்டாளருமான பெரியார் யுவராஜ்-லீலாவதி ஜாதி-சடங்கு-தாலி மறுப்பு மணவிழா, செப். 22, 2019 அன்று மயிலாடுதுறை சோழம்பேட்டை கே.ஜி.ஆர். திருமண மண்டபத்தில் மாலை 7 மணியளவில் நிகழ்ந்தது. நாகை மாவட்ட கழகச் செயலாளர் மகேஷ் வரவேற்புரையாற்றினார். தஞ்சை மாவட்டக் கழகத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வாழ்த்துரை வழங்கினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று மணவிழாவை நடத்தி வைத்தார். முன்னதாக கோவை கழகத் தோழர் இசைமதி - பெண்ணுரிமைப் பாடல் பாடினார். கோவை கழக செயல்பாட்டாளர் நிர்மல்குமார், கழகத் தோழர் இசைமதி ஆகியோர் ஜாதி மறுப்பு மணவிழாவை பொதுக் கூட்ட மேடையில் நடத்திக் கொண்டனர். தோழர் இசைமதியின் சகோதரியே லீலாவதி என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்கையை உறவாக்கிக் கொள்ளும் பண்பாட்டுப் புரட்சியை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் நிகழ்த்தி கழகத்துக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள். கோவையிலிருந்து தனி வாகனத்தில் கழகத் தோழர்கள் மணவிழாவுக்கு வந்திருந்தனர். மயிலாடுதுறை கழகத் தோழர்கள் மணவிழாவுக்கான ஏற்பாடுகளை செய்தனர். பரப்புரைப் பயணம் நிறைவு விழா மாநாட்டில் பள்ளிபாளையத்தில் பங்கேற்ற சென்னை மாவட்டக் கழகப் பயணக் குழுவினர் பரப்புரை வாகனத்திலேயே மண விழாவுக்கு வந்திருந்து சிறப்பித்தனர்.

## கழக ஏடுகளுக்கு நன்கொடை

ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட வடசென்னை கழக இணையர்கள் தினகரன்-ஜெயந்தி ஆகியோர் குழந்தைப் பிறந்த மகிழ்வாக கழக ஏடுகளின் வளர்ச்சிக்கு ரூ.10,000/-த்தை பெரியார் பிறந்த நாளான செப்.17 அன்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 3rd october 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN